**O.S. 6/2019 , 23.11.2021, 11.55 am -12.05 pm**

**வா.சா.2, லட்சுமி, க/பெ.ராஜா, வயது 60**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

வாய்மொழி பாகத்திற்கு பிறகு என்னுடைய சகோதரர்களுக்கும், சாமு என்பவருக்கு பட்டா மாற்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாமுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அவர் தனியாகவும், என்னுடைய தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் நாங்கள் அனைவரும் சுவாதீனத்தில் இருந்து வந்தோம் என்றால் சரிதான். 1994ஆம் வருடம் கோவிந்தன் என்பவர் அவருக்கு வந்த பாகத்தை கிணற்றில் 1/6 பங்கு மற்றும் 36 செண்ட் நிலத்தை 3ம் பிரதிவாதியான சாமுவிற்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. 1995லும் 1ம் பிரதிவாதி அவருடைய பிள்ளைகளுடன் 32 செண்ட் நிலமும், கிணற்றில் 1/6 பங்கு, மோட்டார் பம்புசெட் ஆகியவற்றை 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் சொத்தை மாற்றி கொண்டார்கள் என்று சொன்னால் எங்களுக்கு தெரியாமல் மாற்றி கொண்டார்கள். அவ்வாறு மாற்றிகொண்ட பிறகு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தனித்தனி சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பட்டா மட்டும் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ளதே தவிர எங்கள் பெயரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய தாயார் பெயரில் பட்டா உள்ளது. எந்தவிதமான வருவாய்துறை ஆவணங்களும் என்னுடைய தாயார் பெயரிலோ, என்னுடைய சகோதரர்கள் பெயரிலோ கூட்டாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்கள் எந்த காலத்திலும் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. திருமணமாகி 50 வருடங்கள் இருக்கும் என்றும் அன்றைய தேதியிலிருந்து என்னுடைய கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றும், நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி அவருடைய பேரன்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கை தாக்கல் செய்யலாம் என்று 2ம் பிரதிவாதி தான் எங்களை அழைத்து சென்று வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல, நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். தற்பொழுதும் நீதிமன்றத்திற்கு நான் 2ம் பிரதிவாதியுடன் தான் வந்தேன் என்றால் சரியல்ல, நான் வியாபாரம் செய்துவிட்டு தனியாக வந்தேன். வழக்கு சொத்தில் எனக்கு எந்த பாகமும் கிடையாது என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை:- இல்லை.